இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 197 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 15 – செவ்வாய்க்கிழமை 27 பிப்ரவரி 2024 – வெளியூர் 10 + 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 197 : Thiruvalluvar Year - 2055 - Maasi 15 - Tuesday 27 February 2024 - Dak 10 + 12 Pages ₹ 5.00


## இலவசப் பேருந்து பயணத்தினால்

# மேன்மையடைந்து வரும் தமிழ்நாட்டு மகளிர்!

## மு.க.ஸ்டாலினின் ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கு ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில ஏடு புகழாரம்!

**சென்னை, பிப். 27-**

**தமிழ்நாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் மகளிர் இலவசப் பேருந்து பயணத் திட்டத்தால், தமிழ்நாட்டு மகளிர் மேன்மை அடைந்து வருகின்றனர் என்று ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ ஆங்கில நாளேடு செய்திக் கட்டுரை வெளியிட்டுள்ளது.**

நகரப் பேருந்துகளில் மகளிருக்கான விடியல் பயணத் திட்டத்தினால் பெண்களுக்கான சேமிப்பு உயர்ந்துள்ளதுடன், அரசு அளிக்கும் மானியத்தால், போக்குவரத்துக் கழகங்களின் வருவாயும் அதிகரித்துள்ளதாகவும் ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளிதழ் பாராட்டு தெரிவித்துள்ளது.

நகரப் பேருந்துகளில் பெண்களுக்கான கட்டணமில்லா பயணத் திட்டத்தின் நன்மைகள் குறித்து ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளிதழ் சிறப்புக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. சென்னை, கோவை, சேலம், நெல்லை உள்ளிட்ட நகரங்களில், கட்டணமில்லா பேருந்துகளில் பயணம் செய்யும் பெண்களிடம் சி.ஏ.ஜி. (Citizen consumer and civic Action Group) அமைப்பு நடத்திய ஆய்வு அறிக்கை வெளியாகி உள்ளது.

அதன்படி, இத்திட்டத்தினால், மாதம் ஆயிரம் ரூபாய் வரை தங்களால்



சேமிக்க முடிவதாக பெண்கள் தெரிவித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சேமிப்பு, பிள்ளைகளின் கல்வி மற்றும் உணவுத் தேவைக்கு உதவியாக உள்ளதாகவும், ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளதாகவும் அக்கட்டுரையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும், கட்டணமில்லா பயணத் திட்டத்திற்காக அதிகபட்ச தூரத்தை கணக்கிட்டு, ஒரு பயணச் சீட்டுக்கு 16 ரூபாய் மானியமாக மாநில அரசு வழங்குவதால், போக்குவரத்துக் கழகங்களுக்கு வழக்கமானதைவிட கூடுதல் வருவாய் கிடைப்பதாகவும், போக்குவரத்துக் கழகங்களுக்கு 16 ஆயிரத்து 788 கோடி ரூபாய் அரசின் மானியம் கிடைத்துள்ளதாகவும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் முக்கியமான 6 நகரங்களில் தொடர்ந்து பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளும் 3 ஆயிரம் பெண்களிடம் அவர்களின் இலவசப் பயணம் தொடர்பாக சர்வே எடுக்கப்பட்டது.

அந்த சர்வே முடிவின்படி அவர்கள் மட்டும் பயனடையாமல் பேருந்து கழகங்களும் பலனடைந்து வருவது தெரியவந்துள்ளது. வரிப் பணம் மீண்டும் பகிர்ந்தளிக்கப்படுவது, நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறு பயன்கள் கிடைக்கப் பெறுவதும் தெரியவந்துள்ளது.

தி.மு.க. அரசின் இந்த கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம் அரசியல் காரணங்களுக்காக வேண்டுமானால் சிறிதளவிலான விமர்சனங்கள் எழுகிறதே தவிர, உண்மையில் அத்திட்டம் ஏழைகளுக்கான நலத் திட்டமாகத்தான் உள்ளது.

சென்னையில் 50 சதவிகித பேருந்துகள் (சுமார் 1500 பேருந்துகள்) மட்டுமே மகளிர் கட்டணமில்லா பேருந்துகளாகச் செயல்படுவதால் பயணிக்கும் மகளிர் கூட்டம் நிரம்பி வழிவதால் அது குறித்து எதிர்மறை விமர்சனங்கள் இருந்தாலும் அத்தனை மகளிரும் பயனடைவதை பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு இலவச டிக்கெட்டுக்கும் அரசு ரூபாய் 16 நஷ்ட ஈடு வழங்குவதால், பேருந்து கழக நிர்வாகத்திற்கும்



While Women Benefit From Free Fares, The Scheme Also Boosts Revenue And Ridership For Transport Corporations And Reduces Congestion And Pollution

WHEELS OF THE BUS GO WIN, WIN, WIN

G Ananthakrishnan

A survey of 3,000 regular women bus users in six Tamil Nadu cities has thrown up an overall win-win outcome for all concerned — users, transport corporation and the wider economy. The scheme involves a redistribution of tax funds, and its results demonstrate direct and indirect benefits for all, and actual financial gain for the transport corporations, not a loss as many perceive.

The key result as per the survey carried out by the Citizen consumer and civic Action Group (CAG) is enhanced cost-free mobility for women and resultant monthly savings of ₹400 reported by two-thirds of beneficiaries; 18% savings of ₹801 to ₹1,000 pm, which went towards food and education expenses. The survey was carried out in Chennai, Coimbatore, Salem, Tiruvannamalai, Tiruvarur and Tirunelveli.

Positive as it is, the DMK govt's free fare scheme has provoked a minority of negative reactions, some for political reasons, but largely due to a poor understanding of outcomes. There is also a negative perception due to crowding in the free-for-women buses caused by lack of fleet expansion in transport corporations, particularly for Chennai. Only 50% of Chennai's MTC buses (1,500) are free for

CAG says, translating to significant revenue. The assumption is that the 'zero fare' ticket for women can be used end-to-end on a route, and the govt compensation meets that full fare. Accounted for thus, the narrative of loss to the corporation and the argument of fare-paying male passengers subsidising

in some cases, seek healthcare that might have otherwise not been utilised. Just 30% of the respondents said they had 'no income', while 328 earned ₹5,000 and below and 830 made ₹5,001 to ₹10,000. Only six respondents reported incomes above ₹1 lakh indicating that the quality of bus travel needs to improve to draw

OTHER SPIN-OFFS FROM WOMEN'S FREE TRAVEL INCLUDE WOMEN BEING ABLE TO TRAVEL LONGER DISTANCES WITHOUT EXTRA EXPENDITURE, TO ACCESS EMPLOYMENT,

port unions highlighted the issue of vacancies when they proposed to strike work in January.

The CAG proposed a solution to crowding by making all services free for women, not just the ordinary ones, thus levelling out passengers across deluxe, express and ordinary services. Fleet augmentation to meet the norms of the Union housing ministry at 60 buses per one lakh population translates into 5,300 buses for Chennai and its suburbs — and adequate service in all geographical areas remains a critical issue.

Chennai's MTC has shrunk services on several inner city routes, preferring to connect suburban termini along arterial roads. Residential localities have been neglected, and often lack walkable bus access. This has spurred the rise of thousands of share autorickshaws. Free connector services to suburban train services and metro stations would help working women who travel by train from neighbouring districts and want quick connections to workplaces. Similar efforts are needed in all cities and towns.

The 'Vidiyal Payanam' free-fare travel scheme for women provides a base on which future welfarist public transport can be built by regulator Chennai unified metropolitan transport authority (Cumta). Technology to map travel behaviour holds the key. Digital initiatives to 'tap in' and 'tap out' of buses and other modes of transport (including free travel and fare collection) can help track peak travel demand and reduce choke points. Integration of buses, metro, suburban trains, share autos and

கணிசமான தொகை கிடைக்கிறது. மகளிர்க்கு இலவசப் பயணம்; ஆனால் அதற்கான டிக்கெட்டாய் நிர்வாகத்திற்கு நஷ்டஈடு கிடைத்து விடுவதால் இது இன்னொரு பக்கம் பயன் என்றும் கருதலாம்.

பொது விநியோக முறை மூலம் உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவதைப் போன்றே மக்களின் வரிப்பணம், கட்டணமில்லா பேருந்து பயணத்திற்காக செலவிடப்படுவதை எப்படி குறைகூற முடியும் என்றும் கேள்வி எழுப்பி உள்ள ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ கட்டுரை, இத்திட்டத்தை குறைகூறுவது அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றும் தெரிவித்துள்ளது.

---

## சம்பா, தாளடி பருவத்தில்

# 2.53 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல்!

## உடனடி பணம் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி

*தஞ்சை, பிப். 27 -*

தஞ்சை மாவட்டத்தில் நடப்பு சம்பா, தாளடி பருவத்தில் அறுவடை பணிகள் தீவிரமடைந்துள்ளது. இதுவரை 513 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 2,53,766 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் சம்பா, தாளடி பருவத்தில் தற்போது வரை 1,18,623 எக்டர் பரப்பில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு 60 சதவீதம் பரப்பில் அறுவடை பணிகள் நிறைவடைந்துள்ளன. தற்போது அறுவடை பணிகள் தீவிரமடைந்துள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் சன்ன ரகம் ஒரு கிலோ ரூ.23.10க்கும், மோட்டா ரகம் ரூ.22.65க்கும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் தற்போது வரை 513 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 2,53,766 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

விற்பனை செய்யப்படும் நெல்லிற்கு உண்டான தொகை உடனடியாக விவசாயிகளுக்கு ரூ.2 கோடி மின்னணு வங்கிப் பண பரிவர்த்தனை மூலமாக வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட முழுவதும் தற்போது நெல் அறுவடை முழு வீச்சில் நடந்து வருகிறது.

இதனால் நேரடி கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் நெல்லை விற்பனை செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். அரசின் இந்த நடவடிக்கைக்கு விவசாயிகள் பாராட்டு தெரிவிக்கின்றனர். நெல் தேக்கமடையாமல் தினமும் குறைந்தபட்சம் ஆயிரம் மெ.டன். ஒவ்வொரு நேரடி கொள்முதல் நிலையங்களிலும் கொள்முதல் செய்யப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சென்ற ஆண்டை காட்டிலும் கூடுதலாக நெல் கொள்முதல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாவட்டம் முழுவதும் விவசாயிகள் மற்றும் தனியார் நெல் அறுவடை இயந்திர உரிமையாளர்களின் கருத்துக்களை கேட்டறிந்ததன் அடிப்படையில் பெல்ட் டைப் தனியார் நெல் அறுவடை இயந்திரங்களுக்கு மணிக்கு வாடகையாக ரூ.2,500/,ம் டயர் டைப்க்கு ரூ.1,750/ வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நிர்ணயம் செய்யப்பட்ட இந்த வாடகைத் தொகைக்கு மிகாமல் விவசாயிகளிடமிருந்து வசூல் செய்து கொண்டு அறுவடை இயந்திர உரிமையாளர்கள் இயந்திரங்களை பணியில் ஈடுபடுத்தி ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று மாவட்ட அதிகாரி கேட்டு கொண்டுள்ளார். நடப்பு கோடை பருவத்தில் 1200 எக்டர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 1,14,601 எக்டர் சம்பா பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**வாடகை விதி மீறல் புகார் தர அழைப்பு!**

நிர்ணயிக்கப்பட்ட வாடகையை விட கூடுதலாக விவசாயிகளிடமிருந்து வாடகை வசூல் செய்தால், புகார் தெரிவிக்க விரும்பும் விவசாயிகள் வருவாய் கோட்ட அலுவலர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்களிடம் புகார் தெரிவிக்கலாம்.

மேலும் மாவட்ட ஆட்சியரகத்தில் இயங்கிவரும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண், தஞ்சாவூர், செயற்பொறியாளர்(வே.பொ) எண். 90035 23343, தஞ்சாவூர், உதவி செயற்பொறியாளர் (வே.பொ) எண். 94431 17138, கும்பகோணம், உதவி செயற்பொறியாளர்(வே.பொ) எண். 94436 78621, பட்டுக்கோட்டை, உதவி செயற்பொறியாளர் (வே.பொ) எண். 99761 93110 மற்றும் தஞ்சாவூர் வட்டார போக்குவரத்து அலுவலர் எண். 94420 93161, தஞ்சாவூர், மோட்டார் வாகன ஆய்வாளர் எண். 93848 08537, கும்பகோணம், மோட்டார் வாகன ஆய்வாளர் எண். 99947 72510, பட்டுக்கோட்டை மோட்டார் வாகன ஆய்வாளர் எண். 93848 08366 என்ற எண்களில் புகார் தெரிவித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

★ நெல் தேக்கமடையாமல் தினமும் குறைந்தபட்சம் ஆயிரம் மெ.டன். ஒவ்வொரு நேரடி கொள்முதல் நிலையங்களிலும் கொள்முதல் செய்யப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சென்ற ஆண்டை காட்டிலும் கூடுதலாக நெல் கொள்முதல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## டிரைவர் இன்றி

# 70 கி.மீ. தூரம் ஓடிய சரக்கு ரெயில்!

## அதிகாரிகள் அதிர்ச்சி! விசாரணை நடத்த முடிவு!

*ஜம்மு, பிப். 27 -*

காஷ்மீரில் இருந்து பஞ்சாப் வரை டிரைவர் இல்லாமல் ஓடிய சரக்கு ரயில்: மணிக்கு 100 கி.மீ வேகத்தில் சென்றதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது!

ஜம்மு - காஷ்மீரில் இருந்து பஞ்சாப் வரை ஓட்டுநர் இல்லாமல் ஒரு சரக்கு ரயில் 70 கிமீ தூரம் ஓடிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஜம்மு-காஷ்மீரின் ஜம்முவில் இருந்து பஞ்சாப் மாநிலம் ஜலந்தருக்கு நேற்று முன்தினம் காலை சரக்கு ரயில் சென்றது. 53 பெட்டிகளை கொண்ட அந்த ரயில் காலை 7.25 மணிக்கு கத்துவா ரயில் நிலையத்திற்கு வந்தது. அங்கு ஓட்டுநர்கள் மாற்றப்பட வேண்டும் என்பதால் டிரைவர் மற்றும் உதவி டிரைவர் ஆகியோர் ரயிலில் இருந்து கீழே இறங்கியுள்ளனர்.



அப்போது சரிவாக இருந்த அந்த பாதையில் ரயில் திடீரென நகர்ந்தது.

ரயில் வேகமாக ஓடியதால் அங்கிருந்த ரயில்வே அதிகாரிகள், பணியாளர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. ரயில் வேகமாக ஓடியதால் அந்த தடத்தில் உள்ள அனைத்து ரயில் நிலையங்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு ரயில் பாதையை யாரும் கடக்க வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது. சாய்வான பாதை என்பதால் சில பகுதிகளை கடக்கும் போது ரயில் மணிக்கு 100 கி.மீ வேகமெடுத்தது பரபரப்பை ஏற்படுத்தியது. நீண்ட போராட்டத்துக்கு பின் காலை 9 மணிக்கு பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ஊஞ்சி பாசின் என்ற மேடான பகுதியில் தண்டவாளத்தில் மணல் மூட்டைகள் போட்டு ரயில் நிறுத்தப்பட்டது.

இதற்கிடையில் ரயில் 70 கிமீ தூரத்தை கடந்து விட்டது. ஓட்டுநர் இல்லாமல் ரயில் ஓடிய வீடியோ காட்சிகள் இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இது குறித்து கூறிய வடக்கு ரயில்வே அதிகாரிகள், “70 கிமீ தூரம் டிரைவரின்றி ஓடிய ரயில் ஊஞ்சி பாசின் ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டது. இதில், உயிர் சேதமோ, பொருட் சேதமோ ஏற்படவில்லை. இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது” என்றனர்.

டிரைவர் ரயிலில் இருந்து இறங்கும் போது ஹேண்ட்பிரேக் போடாமல் இறங்கி விட்டதால் இச்சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 27-02-2024

# வேட்டைக்குப் பயன்படுத்தப்படும் அமைப்புகள்

புலனாய்வு அமைப்புகளை தனது வேட்டைக்கு பா.ஜ.க. பயன்படுத்தி வருவதாக பல ஆண்டுகளாக குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டு வருகிறது. அதற்கு மழுப்பல் பதில்களையே பா.ஜ.க. சொல்லி வந்தது. ஆனால் இப்போது அம்பலம் ஆகி இருக்கும் செய்திகள், அந்தக் குற்றச்சாட்டுகள் நூறு விழுக்காடு உண்மை என்பதை உறுதிப்படுத்தி இருக்கின்றன.

சி.பி.ஐ., அமலாக்கத்துறை சோதனைகளுக்கு உள்ளான பல நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு 335 கோடி ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளதாகவும், இதுகுறித்து உச்ச நீதிமன்றக் கண்காணிப்பில் விசாரணை நடத்த வேண்டும் என்றும் காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

**காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ் இந்தக் குற்றச்சாட்டை பகிரங்கமாக வைத்துள்ளார். கடந்த 4 ஆண்டுகளில் அமலாக்கத்துறை, சி.பி.ஐ. உள்ளிட்ட ஒன்றிய விசாரணை அமைப்புகள் பல்வேறு நிறுவனங்களில் சோதனை மேற்கொண்டதாகவும், இந்தச் சோதனைகளுக்குப் பிறகு 30 நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு 335 கோடி ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளதாகவும் அவர் சொல்லி இருக்கிறார்.**

அமலாக்கத்துறை, சி.பி.ஐ. சோதனைகள் மூலம் பல நிறுவனங்கள் பா.ஜ.க. அரசால் மிரட்டப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டிய ஜெய்ராம் ரமேஷ், இது அப்பட்டமான மாமூல் வசூல் என தெரிவித்துள்ளார். பா.ஜ.க.வுக்குக் கிடைத்த நன்கொடை குறித்து உச்சநீதிமன்ற கண்காணிப்பில் விசாரணை நடத்த வேண்டும் என்றும், இதுதொடர்பாக காங்கிரஸ் சார்பில் வழக்குத் தொடர முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சொல்லி இருக்கிறார்.

அமலாக்கத்துறை, சி.பி.ஐ. சோதனைக்குப் பிறகு பல நிறுவனங்கள் பா.ஜ.க.வுக்கு நன்கொடை வழங்கியது குறித்து ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் விளக்கம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்திய அவர், இது குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடக் கோரி காங்கிரஸ் சார்பில் கடிதம் எழுதப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

**ஒரு பக்கம் தேர்தல் பத்திரங்கள் மூலம் வசூல், மற்றொரு பக்கம் சோதனைகள் நடத்தி பிளாக்மெயில் செய்து பா.ஜ.க. வசூல் வேட்டை நடத்தியுள்ளதாகவும், அமலாக்கத்துறை, சி.பி.ஐ., வருமானவரித்துறை ஆகிய 3 அமைப்புகளும் பா.ஜ.க.வால் முறைகேடாக பயன்படுத்தப்படுவதாகவும் ஜெய்ராம் ரமேஷ் குற்றம்சாட்டினார்.**

ஒன்றிய பா.ஜ. அரசு கடந்த 2018-ம் ஆண்டு கொண்டு வந்த தேர்தல் பத்திரங்கள் திட்டம் செல்லாது என்று உச்ச நீதிமன்றம் கடந்த வாரம் தீர்ப்பளித்தது. அரசியல் கட்சிகளுக்கு தொழில் நிறுவனங்கள் தேர்தல் பத்திரங்கள் மூலம் நிதி அளித்துவிட்டு அதற்கு கைமாறாக பிரதிபலன் எதிர்ப்பார்க்க வாய்ப்பு உள்ளது என்றும், யார் நிதி அளித்தது என்ற விவரம் வெளிப்படையாக தெரிவிக்கப்படாமல் இருப்பதையும் 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு தனது தீர்ப்பில் சுட்டிக் காட்டியது.

நிதி தந்தவர்கள், அதை பெற்றுக் கொண்ட கட்சிகள் பற்றிய விவரங்களை மார்ச் 13 ஆம் தேதிக்குள் இணையதளத்தில் பதிவேற்ற தேர்தல் ஆணையத்துக்கு உச்ச நீதிமன்றம் கெடு விதித்துள்ளது.

தேர்தல் பத்திரங்கள் திட்டம் மூலம் அதிகபட்ச நிதியைப் பெற்றது பா.ஜ.க. அந்த கட்சிக்கு மட்டும் கடந்த 2017-18 முதல் 2022-23ம் ஆண்டு வரை மொத்தம் ரூ.6,570 கோடி நிதி தேர்தல் பத்திரங்கள் மூலம் கிடைத்திருந்தது. அந்த கால கட்டத்தில் விற்பனையான தேர்தல் பத்திரங்களில் 60 சதவீதம் பா.ஜ.வுக்கு வழங்கப்பட்டிருந்தது. இவை உண்மையாக வழங்கப்பட்ட நிதிகள் அல்ல என்பது அம்பலம் ஆகி உள்ளது.

தொழில் நிறுவனங்கள் மீது அமலாக்கத்துறை (ஈ.டி.), வருமான வரித் துறை (ஐ.டி.), சி.பி.ஐ.யை ஏவி அந்த நிறுவனங்களிடம் இருந்து பா.ஜ.வுக்கு தேர்தல் நிதி பெறப்பட்டதாக பிரபல ஆங்கில செய்தி இணையதளங்கள் ஆதாரத்துடன் செய்தி வெளியிட்டுள்ளன.

2018-19 முதல் 2022-23 நிதியாண்டு வரையிலான தேர்தல் ஆணைய ஆவணங்கள், வழக்கு விவரங்கள், நிதி அறிக்கைகளை ஆய்வு செய்து இந்த தரவுகளை திரட்டிய அந்த இணையதளங்கள் அதனை அம்பலப்படுத்தி உள்ளன.

**"கடந்த 2018-19 முதல் 2022-23 நிதியாண்டு வரை பா.ஜ.வுக்கு நிதியளித்த நிறுவனங்கள் பட்டியலை பரிசீலித்ததில் அதில் 30 நிறுவனங்கள் மீது அதே காலகட்டத்தில் ஒன்றிய அரசின் ஈ.டி., ஐ.டி., சி.பி.ஐ. ரெய்டு நடத்தியுள்ளது. இந்த 30 நிறுவனங்களும் மொத்தம் ரூ.335 கோடியை பா.ஜ.வுக்கு தேர்தல் நிதியாக தந்துள்ளன. இதில் 23 நிறுவனங்கள் ரெய்டு நடத்தப்படும் வரை பா.ஜ.வுக்கு ஒரு பைசா கூட தேர்தல் நிதி தந்தது இல்லை. ரெய்டு நடத்தப்பட்டதும் அந்த 23 நிறுவனங்களும் பா.ஜ.வுக்கு நிதி தர ஆரம்பித்துள்ளன. மொத்தம் ரூ.187.58 கோடி நிதியை அந்த நிறுவனங்கள் பா.ஜ.வுக்கு வாரி வழங்கி உள்ளன.**

**4 கம்பெனிகளில் ரெய்டு நடத்தப்பட்ட 4 மாதத்துக்குள் பா.ஜ.வுக்கு நிதி தந்துள்ளன. பா.ஜ.வுக்கு ஏற்கனவே குறைவாக நிதி தந்த 6 நிறுவனங்கள் மீது ரெய்டு நடத்தப்பட்டுள்ளது. அடுத்த சில மாதங்களிலேயே அந்த நிறுவனங்கள் பல மடங்கு அதிக நிதியை பா.ஜ.வுக்கு கொடுத்துள்ளன. தொடர்ந்து பல ஆண்டுகளாக பா.ஜ.வுக்கு நிதி தந்த நிறுவனங்கள் திடீரென நிதி தருவதை நிறுத்திவிட்டால் கூட ரெய்டு நடத்தப்பட்டுள்ளது.**

**இப்படி 6 நிறுவனங்களை ஈ.டி., ஐ.டி., சி.பி.ஐ. அதிகாரிகள் சோதனையிட்டுள்ளனர். ரெய்டு நடந்து கொண்டிருக்கும் போதே சில நிறுவனங்கள் பா.ஜ.வுக்கு நிதி தந்ததும் தெரிய வந்துள்ளது. நன்கொடை தந்த 3 நிறுவனங்களுக்கு ஒன்றிய அரசிடம் இருந்து லைசென்ஸ் உள்ளிட்ட சலுகைகள் கிடைத்துள்ளன"** - என்று அந்த ஆங்கில இணைய தளங்கள் விரிவாக எழுதி இருக்கின்றன.

**ஈ.டி., ஐ.டி., சி.பி.ஐ.யைப் பயன்படுத்தி தொழில் நிறுவனங்களில் ரெய்டு நடத்தி மிரட்டி பா.ஜ.வுக்கு தேர்தல் நிதி குவித்த விவகாரம் என்பது மாபெரும் நிதி மோசடியாகும். இதுதான் பா.ஜ.க.வின் உண்மை ஊழல் முகம் ஆகும். இதுதான் பா.ஜ.க.வின் மாடல் ஆகும். ஆட்சிகளை கவிழ்க்கவும் கட்சிகளை உடைக்கவும் இவைதான் பயன்படுத்தப்படுகிறது.**

## 2,21,815 பயனாளிகளுக்கு ரூ.423.95 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள்!

# பெருவெள்ளம் - அதிகனமழையால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி - நெல்லை மாவட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

தூத்துக்குடி, பிப்.27 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.2.2024) தூத்துக்குடியில் - தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பெரு வெள்ளம் மற்றும் அதி கனமழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் நிகழ்ச்சியில், மொத்தம் 2,21,815 பயனாளிகளுக்கு ரூ.423.95 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களான தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம், 17 மற்றும் 18 ஆகிய நாட்களில் வரலாறு காணாத அதி கனமழைப் பொழிவு ஏற்பட்டது. இதில் குறிப்பாக தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள் இந்த அதி கனமழையால் கடுமையாக பாதிக்கப்பட்டதால், பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதோடு, வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கும், பொது மற்றும் தனியார் கட்டமைப்புகளுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது.

கனமழையால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கு கூடுதலாக அமைச்சர்கள் மற்றும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் நியமிக்கப்பட்டு, அவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து மீட்புப் பணிகளை மேற்கொள்ளுதல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்குதல், மக்களுக்கு வேண்டிய மருத்துவ உதவிகளை வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டனர்.

அதிகனமழையால் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கடுமையாக பாதிப்பிற்குள்ளான பகுதிகளை முதலமைச்சர் அவர்கள் 21.12.2023 அன்று நேரில் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி, மழை வெள்ளத்தால் பாதிப்பிற்குள்ளான பயிர்களுக்கான நிவாரணம் உள்ளிட்ட பல்வேறு நிவாரணத் தொகுப்புகளை அறிவித்தார்.

கொரோனாவாக இருந்தாலும், வரலாறு காணாத புயல், வெள்ளமாக இருந்தாலும் மக்களுடைய துயரங்களை தீர்த்து, அவர்களுடைய வாழ்வாதாரத்தை மறுகட்டமைப்பு செய்ய ஒவ்வொரு தரப்பு மக்களுக்கும் தேவையான திட்டங்களை நிறைவேற்றுவது தான் திராவிட மாடல் அரசு. பாதிக்கப்படும்போது மட்டும் மக்களை பார்த்து விட்டு செல்லாமல், இறுதி வரை மக்களின் துயரங்களை துடைப்பதன் அடையாளமாகத் தான், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம், தூத்துக்குடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பெரு வெள்ளம் மற்றும் அதிகனமழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

**தூத்துக்குடி மாவட்டப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள்**

கூட்டுறவு துறை சார்பில், பயிர்க் கடன், கால்நடை பராமரிப்பு நடைமுறை மூலதனக் கடன், மகளிர் சுயஉதவிக் குழுக் கடன், சிறப்பு சிறு வணிகக் கடன், கால்நடை கொள்முதல் கடன், என மொத்தம் 4446 பயனாளிகளுக்கு 24 கோடியே 54 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்;

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் பகுதி சேதமடைந்த மீன்பிடி விசைப்படகுகள், முழு சேதம் / காணாமல் போன மரப் படகு / பைபர் நாட்டுப் படகு, பகுதி சேதமடைந்த பைபர் நாட்டுப் படகு, வலைகள் மற்றும் இயந்திரம் சேதம், மீன் பண்ணைகள் சீரமைத்தல், உள்நாட்டு மீனவர்களின் காணாமல் போன வலைகள், என அதி கனமழையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கிடும் வகையில், 5137 பயனாளிகளுக்கு 11 கோடியே 91 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நிதி உதவிகள்;

வேளாண்மைத் துறை சார்பில் அதிகனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு நிவாரணம் வழங்கிடும் வகையில், 1,28,205 பயனாளிகளுக்கு 97 கோடியே 59 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவிகள் மற்றும் தோட்டக்கலை துறையில் 41,498 பயனாளிகளுக்கு 25 கோடியே 88 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவிகள்;

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக 20 பயனாளிகளுக்கு 19 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான மோட்டார் பொருத்தப்பட்ட வாகனங்கள் மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் 150 பயனாளிகளுக்கு 12 கோடியே 43 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய்க்கான கடனுதவிகள்;

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் 3845 பயனாளிகளுக்கு 132 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்;

என மொத்தம் தூத்துக்குடி மாவட்டத்தில் 1,83,301 பயனாளிகளுக்கு 305 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**திருநெல்வேலி மாவட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள்**

ஊரக வளர்ச்சித் துறை சார்பில் மழையால் சேதமடைந்த வீடுகளுக்கு பதிலாக புதிய வீடுகள் கட்ட தலா 4 இலட்சம் ரூபாய் வீதமும், பழுது நீக்க தலா 2 இலட்சம் ரூபாய் வீதமும், 779 பயனாளிகளுக்கு 17 கோடியே 98 இலட்சம் ரூபாய் நிதியுதவி;

**கடனை திருப்பி செலுத்த கால அவகாசம்!**

கூட்டுறவுத் துறை சார்பில் விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வாங்கிட 4608 பயனாளிகளுக்கு 47 கோடியே 34 இலட்சத்து 28 ஆயிரம் கடனுதவி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறு வணிகர்களுக்கு சிறப்பு கடனாக 2032 பயனாளிகளுக்கு 6 கோடியே 46 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் கடனுதவி, கூட்டுறவு வங்கியில் கடன் பெற்ற 202 பயனாளிகளுக்கு கடனை திருப்பி செலுத்த கால அவகாசம் வழங்குவதற்கான ஆணைகள்;

வேளாண்மை பொறியியல் துறை சார்பில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை சீர்செய்திட 8 பயனாளிகளுக்கு 1 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் நிதியுதவி;

வேளாண்மைத் துறை சார்பில் அதிகனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு நிவாரணம் வழங்கிடும் வகையில், 12,300 பயனாளிகளுக்கு 8 கோடியே 93 இலட்சம் ரூபாய் நிவாரண உதவிகள் மற்றும் தோட்டக்கலை துறையில் 1305 பயனாளிகளுக்கு 68 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவிகள்;

தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் சார்பில் 327 பயனாளிகளுக்கு 8 கோடியே 21 இலட்சம் ரூபாய் கடனுதவி;

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 210 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 16 கோடியே 15 இலட்சம் ரூபாய் கடனுதவி;

மீன்வளத்துறை சார்பில் மழை வெள்ளத்தால் படகுகள், எஞ்சின்கள் சேதமடைந்த மீனவர்களுக்கு நிவாரண உதவி வழங்கிடும் வகையில் 1053 மீனவர்களுக்கு 2 கோடியே 39 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் நிதியுதவி;

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் மழை வெள்ளத்தால் கால்நடைகளை இழந்த 1051 விவசாயிகளுக்கு 6 கோடியே 95 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கடனுதவி;

பள்ளிக்கல்வித் துறை சார்பில் மழை வெள்ளத்தால் பாட புத்தகங்களை இழந்த 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் 4803 மாணவ, மாணவிகளுக்கு புதிய புத்தகங்கள் வழங்குதல்;

வருவாய்த் துறை சார்பில் அதிகனமழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் உயிரிழந்த 11 நபர்களின் குடும்பத்தினருக்கு 55 இலட்சம் ரூபாய் நிதியுதவி, 6647 கால்நடை உயிரிழப்பிற்கு 1 கோடியே 68 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் நிதியுதவி, சேதமடைந்த வீடுகளின் 1553 பயனாளிகளுக்கு 1 கோடியே 49 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய் நிதியுதவி;

போக்குவரத்துத் துறை சார்பில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 1556 வாகனங்கள் பழுது நீக்கப்பட்டது, மழை வெள்ளத்தால் வாகனங்களை இழந்த 69 பயனாளிகளுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது;

என மொத்தம் திருநெல்வேலி மாவட்டத்தில் 38,514 பயனாளிகளுக்கு 118 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பெருவெள்ளம் மற்றும் அதிகனமழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் நலத்திட்ட உதவிகளாக மொத்தம் 2,21,815 பயனாளிகளுக்கு ரூ.423.95 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் சி.சண்முகையா, ஜி.வி. மார்க்கண்டேயன், ஊர்வசி செ.அமிர்தராஜ், அப்துல் வஹாப், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் கோ.லட்சுமிபதி, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கா.ப.கார்த்திகேயன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருச்சியில் தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

# மண்டல நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

*சென்னை, பிப். 27 -*

*தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பரிவு மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -*

*தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (27.2.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 10 மணியளவில், திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.*

*இந்நிகழ்வில் திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், அரியலூர், பெரம்பலூர், கரூர், திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட, மாநகர, தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

**பொருள்:** *மார்ச் 1 முதலமைச்சர்; கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளினை எழுச்சியோடு கொண்டாடுதல்.*

*"நம்மில் ஒருவர் நமக்கான தலைவர் மு.க.ஸ்டாலின்" கருத்தரங்கம் மற்றும் கலந்துரையாடல் நிகழ்வு நடத்துவது.*

*பாசிசத்தை வீழ்த்தும் 2024 நாடாளுமன்றத் தேர்தல் ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுவதாக கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் தெரிவித்துள்ளார்.*



குறிஞ்சி இல்லத்தில் சவூதி அயலக தி.மு.க.வின் மூத்த அமைப்பாளர் சேலம் சிக்கந்தர் ஒருங்கிணைப்பாளர், ஜவகர் சவரி முத்து தயாரிப்பில், திரைப்பட இசையமைப்பாளர் தாஜ் நூர் இசையமைப்பில், கவிஞர் நாகூர் பாரியின் பாடல் வரிகளில், கலைமாமணி இறையன்பன் குத்தூஸ் பாடிய "வந்தாச்சு வந்தாச்சு மாசம் ஆயிரம் என்ற பாடலின் ஒலிப்பேழையை கழக இளைஞர் அணிச் செயலாளர் – விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட, நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவருமான என்.கௌதமன், அயலக அணி செயலாளர் எம்.எம். அப்துல்லா எம்.பி. ஆகியோர் பெற்றுக் கொண்டார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.2.2024) தூத்துக்குடி, சூசைபாண்டியபுரத்தில் நடைபெற்ற தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பெரு வெள்ளம் மற்றும் அதி கனமழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு கடனுதவிக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சமூகநலம் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, சட்டமன்ற உறுப்பினர்கள் சி.சண்முகையா, ஜி.வி. மார்க்கண்டேயன், ஊர்வசி செ. அமிர்தராஜ், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ. ஜெகன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் கோ. லட்சுமிபதி, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கா.ப. கார்த்திகேயன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.188.09 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட

# அடுக்குமாடி தொழில் வளாகங்கள் மற்றும் தொழிலாளர் தங்கும் விடுதிகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை,பிப்.27-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 24.02.2024 அன்று குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் சார்ப்பில் கிண்டி மற்றும் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் முறையே ரூ.94.67 கோடி மற்றும் ரூ.63.95 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட அடுக்குமாடி தொழில் வளாகங்களையும், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ரூ.29.47 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட தொழிலாளர்கள் தங்கும் விடுதியினையும் திறந்து வைத்தார்.

இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் குறு, சிறு நிறுவனங்களுக் காக 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகத்தை துவக்கி வைத்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தமிழ்நாடு சிட்கோ மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்கள் உடனடியாக தொழில் துவங்கு வதற்காக கிண்டி மற்றும் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ரூ.188.09 கோடி மதிப்பில் அடுக்குமாடி தொழில் வளாகம், தொழிலாளர் தங்கும் விடுதி இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் பெரிய தொழிற்சாலைகளுக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் அளிக்கிறார்களோ அதே அளவிற்கு குறு, சிறு நிறுவனங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கிறார். தொழிற் வளர்ச்சியில் தமிழ்நாடு இந்திய அளவில் இரண்டாம் இடம் வகிக்கின்றது. தொழில் துவங்க உகந்த மாநிலங்கள் பட்டியலில் முதல் இடமும், மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் முதல் இடமும் பெற்றிருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள மகளிரில் 42 சதவீதப் பெண்கள் பணிக்கு செல்லும் பெண்களாக உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வேளாண் சார்ந்த தொழில்களுடன் தொலை நோக்கு திட்டங்களான சிட்கோ, சிப்காட் போன்ற நிறுவனங்களின் மூலம் நவீன தமிழ்நாட்டை படைத்திருக்கிறார். அதன் வளர்ச்சியை தான் இன்று நாம் காண்கின்றோம். இது போன்று தொலைநோக்கு திட்டங்கள் இல்லாத காரணத்தினால் தான் வடமாநில தொழிலாளர்கள் இன்று தென் மாநிலங்களுக்கு புலன் பெயர்ந்து வந்துள்ளனர். அவர்களின் நலனையும் நம் திராவிட மாடல் அரசு பாதுகாத்து வருகின்றது.

முத்தமிழ் அறிஞர் கலைஞரைப் போலவே, தமிழக முதலமைச்சர் அவர்களும் குறு, சிறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்திய தன் காரணமாக பல்வேறு சாதனைகளை படைந்து வருகிறார். கடந்த மாதம் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் MSME துறையின் சார்பாக ரூ. 63,573 கோடி முதலீடுகள் ஈர்க்கும் 5,068 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் 2 லட்சத்து 51 ஆயிரத்திற்கு மேல் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் புதிய தொழில் நுட்பங்களை ஊக்கப்படுத்த புத்தொழில் முனைவோர்களை உருவாக்க முதல்வர் அவர்களால் புத்துயிர் அளிக்கப்பட்டது Start up TN நிறுவனம் இந்திய அளவில் தரவரிசையில் கடைசி இடத்தில் இருந்த Start up தமிழ்நாடு கழக அரசு பொறுப்பேற்ற பின் கடைசி இடத்தில் இருந்து முன்னேறி 2021ல் 3ஆம் இடமான லீடர் விருதினை பெற்றது. தற்போது, ஒன்றிய அரசு வெளியிட்ட 2022ஆம் ஆண்டிற்கான தரவரிசை பட்டியலில் Start up TN நிறுவனம் இந்திய அளவில் முதல் இடம் பிடித்து சிறந்த செயற்பாட்டாளர் என்ற விருதினை பெற்றுள்ளது. கழக அரசு பொறுப்பேற்றதிலிருந்து, தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையில் StartUp நிறுவனங்களை உருவாக்க, புத்தொழில் முனைவோர்களுக்கு ஆதார நிதி வழங்கும் (TANSEED) திட்டத்தின் கீழ் இதுவரை 132 StartUp நிறுவனங்களுக்கு, ரூ.13 கோடியே 95 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாயத்தின் அனைத்து பிரிவுகளில் இருந்தும், தொழில்முனைவோர்கள் உருவாக வேண்டும் என்பதை இலக்காக கொண்டு முதல்வர் SC/ ST StartUp நிறுவனங்களுக்கு, சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்தார்கள். இது வரை,

30 SC/ST தொழில் முனைவோர்க்கு ரூ. 43 கோடியே 65 லட்சம் நிதி உதவியை பங்கு முதலீடாக அரசு வழங்கியுள்ளது. ஆக மொத்தம், கழக அரசு பொறுப்பேற்று இதுவரை 162 StartUp நிறுவனங்களுக்கு, ரூ. 57 கோடியே 60 லட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது என பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதல்வர் SC / ST தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் விதமாக அண்ணல் அம்பேத்கார் தொழில் முன்னோடிகள் திட்டத்தை அறிவித்தார்கள். இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1612 பட்டியல் இனத்தோருக்கு ரூ.187 கோடி அரசு மானியத்துடன் ரூ.580 கோடி கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. சிறப்பாக செயல்பட்டு வரும் இந்த Start Up TN நிறுவனத்திற்கு இந்த நிகழ்ச்சிக்கு முன் நந்தனம் CMRL கட்டிடத்தில் 22 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் ரூ. 5 கோடியே 64 லட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இன்றைய தினம் கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டைகளில் முறையே ரூ.94.67 கோடி மற்றும் ரூ.63.95 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி தொழில் வளாகங்கள் மற்றும் தொழிலாளர்கள் தங்குவதற்காக குறைந்த மாத வாடகையில் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ரூ.29.47 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தொழிலாளர்கள் தங்கும் விடுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 71 ஐ.டி.ஐ. கல்வி நிறுவனங்களை ரூ.2871 கோடி மதிப்பில் சென்டர் ஆப் எக்ஸலென்ஸ் ஆக தரம் உயர்த்தவும், மானாமதுரை, ஒட்டன்சத்திரம், திருத்துறைப் பூண்டி ஆகிய பகுதிகளில் ரூ.32 கோடி மதிப்பில் புதிய தொழிற்பேட்டை அமைக்க நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாட்டில் உள்ள தொழில் முனைவோர்கள் அரசின் திட்டங்களை முழுமையாக பயன்படுத்தி முதல்வரின் 2030 -ல் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கினை அடைய ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர்**

**தா.மோ.அன்பரசன் பேச்சு!**

இந்த விழாவில் தலைமையுரை ஆற்றிய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேசும் போது,

"கிண்டி தொழிற்பேட்டையில் உடனடி தொழில் தொடங்கும் வகையில் தரைதளம் மற்றும் 6 தளங்களுடன், 591 முதல் 1317 சதுரஅடி அளவுகளுடன்

156 அலகுகள் கொண்ட அடுக்குமாடி தொழிற்கூட வளாகமும், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தரை தளம் மற்றும் 4 தளங்களுடன், 545 முதல் 1095 சதுர அடி அளவுகளுடன் 112 அலகுகள் கொண்ட அடுக்குமாடி தொழிற்கூட வளாகம் முறையே, சரக்கு மற்றும் பயணிகள் மின் தூக்கி வசதி, தீயணைப்பு வசதி, தண்ணீர் வசதி, பொது சிற்றுண்டியகம், பல்நோக்கு கூட்ட அரங்கம், வணிக மையம், மருந்தகம் மற்றும் ஒவ்வொரு தளத்திலும் பொதுவான ஒப்பனை அறை, போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதை தவிர்த்து போதுமான அளவு லாரி, கார் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தரை தளம் மற்றும் 5 தளங்களுடன் சுமார் 810 தொழிலாளர்கள் தங்கும் வகையில் 125 அறைகளுடன் தொழிலாளர் தங்கும் விடுதியில் பயணிகள் மின்தூக்கியுடன், நன்கு காற்றோட்டமான அறைகள், வராண்டா, தீயணைப்பு வசதி, தண்ணீர் வசதி, ஓய்வெடுக்கும் அறை, விளையாடும் பகுதி, சலவையகம், மருந்தகம், அவசர மருத்துவ அறை, அழகு நிலையம் மற்றும் பொதுவான சமையலறை, அனைத்து தளங்களிலும் பொதுவான ஒப்பனை அறை, மற்றும் கண்காணிப்பு கேமரா உடன் கூடிய பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவ் விடுதியானது தொழிற்பேட்டையில் பணிபுரியும் தொழிலாளர்கள் தாங்கள் தொழில் செய்யும் இடத்திற்கு அருகாமையிலேயே தங்க வசதியாக இருக்கும்படி அமைக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார்.

இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஏ.எம்.எம்.பிரபாகர் ராஜா, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ் குமார், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் திருமதி.அர்ச்சனா பட்நாயக், தமிழ்நாடு சிட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி.சோ.மதுமதி, சிட்கோ நிறுவனத்தின் பொது மேலாளர் செ.தனலிங்கம் மற்றும் மண்டல குழுத் தலைவர்கள் ஆர். துரைராஜ், பி.கே.மூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் தா.மோகன்குமார், ம.கமல், TANSTIA கிண்டி தலைவர் சி.கே.மோகன், IEMA கிண்டி தலைவர் வி.கே.கிரீஷ் பாண்டியன், AIEMA அம்பத்தூர் தலைவர் வி.அரவிந்த், CAAIIUC அம்பத்தூர் தலைவர் வி.விஜயகுமார் மற்றும் சிட்கோ அலுவலர்கள், பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி பாளையங்கோட்டை பி.பி.எல். திருமண மகாலில் நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க கழக நிர்வாகிகள், பாக முகவர்கள்,களப்பணியாளர்கள் கூட்டம் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் மாநில மகளிர் அணி செயலாளர் பாளை தொகுதி பார்வையாளர் ஹெலன் டேவிட்சன் பங்கேற்று உரையாற்றினார். நிகழ்வில் அவை தலைவர் முருகன், மாநகர செயலாளர் சுப்பிரமணியன், நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், சுப்பிரமணியன், தர்மன், கிரிஜாகுமார்,துணை மேயர் ராஜ், பேச்சிப்பாண்டியன், சேகர், அன்டன் செல்லதுரை, துபாய் சாகுல், அருள்மணி, அன்பழகன், அண்ணாதுரை, பிரான்சிஸ், கதீஜாஇக்லாம் பாசிலா, மகேஸ்வரி, செல்வபாபு உள்பட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி "இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்" திண்ணைப் பிரச்சாரம் பிப். 26 ம் தேதி முதல் மாநகர 1வது வார்டில் இருந்து தொடங்கப்பட்டது.

# நம் நெஞ்சில் நிலைக்கும் நினைவிடங்கள்!



சென்னையில் வங்கக் கடற்கரையின் வெண்மணற் பரப்பில் இரண்டு நினைவிடங்கள் - ஒன்று பேரறிஞர் அண்ணா நினைவிடம், அருகில், அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்று வாழ்ந்த அவர்தம் அன்புத் தம்பி கலைஞர் நினைவிடம். அண்ணா நினைவிடம் இப்போது புதுப்பிக்கப்பட்டுள்ளது; கலைஞர் நினைவிடம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இரண்டு நினைவிடங்களையும், திராவிட நாயகர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்து உலகத் தமிழர்களுக்கு உளமார அர்ப்பணிக்கிறார்.

அண்ணா - கலைஞர் நினைவிடங்கள் திறந்து வைக்கப்படுகின்றன. அந்த நினைவிடங்கள் நோக்கி, ஓயாமல் கரைவந்து மோதிக் கொண்டிருக்கும் வங்கக் கடல் அலைகளைப் போலே, நம் நெஞ்சத்தின் கரைகளில், அண்ணா – கலைஞர் நினைவுகள் மோதி, தங்கத்தமிழோசையை எழுப்பிக்கொண்டே இருக்கின்றன.வங்கக் கடல் வற்றிப்போனாலும், நம் நெஞ்சத்தில் கலந்திருக்கும் அந்தத் தமிழோசை, காலமெலாம் எதிரொலித்துக் கொண்டே இருக்கும். தலைமுறை தலைமுறையாக, அவ்வமுதத் தமிழோசை தமிழினத்தை அன்றாடம் தட்டி எழுப்பி, உணர்ச்சி கொள்ளவே செய்யும் !

**புதுப்பொலிவு பூத்துள்ள அண்ணா நினைவிடத்தில், புத்தகமும் கையுமாய், பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவழகுச் சிலையும்; மகுடம் துறந்து, மாத்தமிழுக்கு மாணிக்கப் பரல்கள் கொண்டு மணியாரம் பூட்ட சிலப்பதிகாரக் காவியம் தந்த முத்தமிழ்ச் சீலர் இளங்கோஅடிகள், கற்கண்டுத் தமிழ்க் கவிச்சக்கரவர்த்தி கம்பர் ஆகியோர்தம் ஆற்றல் பெருக்கும் சிலைகளும்; நம் உள்ளங்களைக் கொள்ளை கொள்கின்றன.**

**புதிதாக எழுப்பப்பட்டுள்ள கலைஞர் நினைவிடத்தில், செங்கோல் பறிபோனாலும் எனது எழுது கோலை யாராலும் பறிக்க முடியாது – என ஆதிக்க புரிக்கு அறைகூவல் விடுத்து, வாழ்நாளெல்லாம் எழுத்துக்களின் வெளிச்சத்திலேயே வாழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞரின் சிலை, தமிழ் செம்மொழியென அறிவிக்கப்பட்ட வரலாறு, கலைஞர் உலகத்தின் கலை – அரசியல் உள்ளிட்ட பன்முகத் தோற்றங்கள், கலைஞரின் தொன்மையும் நவீனமும் கலந்த ஆளுமைப் பக்கங்கள் நம் கண்வழிப் புகுந்து, கருத்தினில் கலந்து, நங்கூரம் பாய்ச்சி நிற்கின்றன.**

**"அசோகர் காலத்துக் கல்வெட்டுகளும், தூபிகளும் இல்லாமல் போயிருந்தால், அந்த மவுரியப் பேரரசனின் மாட்சியினை, நம்மால் உண்மையாகவே உணர்ந்திருக்க முடியுமா ?**

**டில்லியிலே உள்ள குதுப்மினார் கூறிடும் சரித்திரச் சான்றுகள்தான் எத்தனை ! எத்தனை !**

**ஆக்ராவில் அமைந்துள்ள ஷாஜஹானின் தாஜ்மஹால்தான் எத்தகைய எழில் கொஞ்சும் காதல் காவியத்திற்கு அழிவில்லா ஓவியக் கோவிலாக ஒளி வீசுகிறது !**



முக்கியமான சில வரலாற்று நிகழ்ச்சிகளை நினைவுறுத்தும் வடிவங்கள் சமைப்பதையும் தன் கடமையாகக் கொண்டு செயலாற்றி வருகிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

ஏனெனில், வரலாறு என்னும் அருமையான தங்கப் பேழைக்குத் திறவுகோலாய்த் திகழ்பவையே சிலைகள், கல்லறைகள், ஸ்தூபிகள், நெடிய தூண்கள்!" என்று " நெஞ்சுக்கு நீதி "யில் கலைஞர் எழுதினார்.

